வெளியீடு 15

திருக்குறள்

(மூலம் முழுதும்)

திருவள்ளுவர்
அருளியது.

திருக்குறள்முனிசாமி
அவாகளால பாாவையிடப்பட்டது

வெளியிடுவோா —
திருக்குறள் அச்சகம் லிமிடெட்.,
கடலூா (புதுநகா)
1950.

முதல பதிபபு [விலை அணா பதினான்கு]

முன்னுரை:--

திருவளளுவா அருளிய திருக்குறள உலகம போறறும உயரிய பெருநூலாகத திகழ்கின்றது இரண்டாயிரம ஆண்டுகடகு முன்னர தமிழகம தநத அறிவுப்புதையலெனப் போறறபபடுகின்ற இநநூலில வர்ழகைக முன்னேறறதறகும இன்பத்திறகும அறிநதுணர வேண்டிய அனைத தும அமைநதுளளதென்பது உலகறிநத உண்மையாகும.

மகைகளிடையே திருககுறள உணமை பரவும நாள என்னுளோ அனுளே உலகம இனபததுறையில செலலும பொன்னுளாம தமிழராகபபிறநத நாம, உலகெஙகணும திருக்குறள பரவ உழைகக வேண்டியது தலையாய கடமையாகக கொளளுதல வேண்டும எமது அசசகதின் **பதினந்தாவது** திருககுறள–வெளியிடாக இநநூல வருகினறது அன்பாகள ஆதரிப்பாகளாக.

இஙஙனம,

திருக்குறள்முனிசாமி,
பொறுபபாளா

திருக்குறள் அச்சகம் லிமிடெட்.,
கடலூர (புதுநகர)

1–3–1950

திருக்குறள் அதிகார வகராதி

அதிகாரம்	பக்கம்	அதிகாரம்	பக்கம்
அடக்க முடைமை	13	ஈகை	23
அமைச்சு	64	உடபகை	89
அரண்	75	உழவு	104
அருளுடைமை	25	உறுபபுநலனழிதல	124
அலரறிவுறுததல	115	ஊககமுடைமை	60
அவாவயின விதுமபல	127	ஊடலுவகை	133
அவாவறுததல	37	ஊழ	38
அவையஞசாமை	73	ஒபபுரவறிதல	22
அவையறிதல	72	ஒழுககமுடைமை	14
அழுககாறாமை	17	ஒறறாடல	59
அறனவலியுறுததல	4	கடவுள வாழதது	1
அறிவுடைமை	43	கணணோடடம	58
அன்புடைமை	8	கண்விதுபபழிதல	118
ஆளவினையுடைமை	62	கயமை	108
இகல	86	கல்லாமை	41
இடனறிதல	50	கலவி	40
இடுககணழியாமை	63	களளாமை	29
இரவசசம	107	களளுணணாமை	93
இரவு	106	கனவுநிலை யுரைததல	122
இலவாழகனக	5	காதறசிறப புரைததல	113
இறைமாடசி	39	காலமறிதல	49
இனியவை கூறல	10	குடிசெயலவகை	103
இன்னாசெயயாமை	32		

குடிமை 96
குறிப்பறிதல்(பொ) 71
குறிப்பறிதல (கா) 110
குறிப்பறிவுறுதல 128
குற்றங்கடிதல 44
கூடாநட்பு 83
கூடாவொழுக்கம 28
கேள்வி 42
கொடுங்கோன்மை 56
கொல்லாமை 33
சான்றாண்மை 99
சிறறினஞ்சேராமை 46
சுற்றந்தழால 53
தூது 94
செங்கோன்மை 55
செயங்நன்றியறிதல 11
சொலவன்மை 65
தகையணங்
குறுத்தல 109
தவம 27
தனிப்படாமிருத்தி 120
தீநட்பு 82
தீவினையச்சம 21
துறவு 35
தூது 69
தெரிந்துசெயல்
வகை 47
தெரிந்துதெளிதல 51
தெரிந்துவினையாடல 52
நடுவுநிலைமை 12
நட்பாராய்தல 80
நாடு 79
நலம்புனைந
துரைத்தல 112
நலந்தரவு 105
நன்றியிலசெல்வம 101
நாடு 74
நாணுடைமை 102
நாணுத்துற
வுரைத்தல 114
நிலையாமை 34
நிறையழித்தல 126
நினைந்தவாபுலம்பல 121
நீத்தாபெருமை 3
நெஞ்சொடு
கிளத்தல 125
நெஞ்சொடுபுலத்தல 130
பகைத்திறந்தெரிதல 88
பகைமாட்சி 87
பசப்புறுபருவரல 119
படாமெலிந்திரங்கல 117

படைச்செருக்கு 78
பூடைமாட்சி 77
பண்புடைமை 100
பயனிலசொலலாமை 20
பழைமை 81
பிரிவாறருமை 116
பிறனிலவிழையாமை 15
புகழ 24
புணர்ச்சிமகிழ்தல 111
புணர்சசிறிதுமபல 129
புலவி 131
புலவிதுணுகமம 132
புலான்மறுத்தல 26
புலலறிவாண்மை 85
புறங்கூறுமை 19
பெண்வழிசசேரல 91
பெரியாரைத்துணைக கோடல 45
பெரியாரைபபிழை யாமை 90
பெருமை 98
பேதைமை 84
பொசசாவாமை 54
பொருள்செயலவகை 76
பொழுதுகண்டிரங் கல 123
பொறையுடைமை 16
மகடபேறு 7
மடியின்மை 61
மருந்து 95
மன்னரைச்சோந் தொழுகல 70
மானம 97
மெய்யுணர்தல 36
வரைவின்மகளிர 92
வலியறிதல 48
வாயமை 30
வாழகைகத துணைநலம 8
வான்சிறப்பு 9
விருநதோமபல 2
வினைசெயலவகை 68
வினைத்திடபம 67
வினைத்தூயமை 66
வெகுளாமை 31
வெஃகாமை 18
வெருவநத செய்யாமை 57

திருக்குறள்

அறத்துப்பால்

இயல்கள்:	அதிகாரம்:
1. பாயிரவியல்	1—4
2. இல்லறவியல்	5—24
3. துறவறவியல்	25—37
4. ஊழியல்	38, 9

1. கடவுள் வாழ்த்து.

அகர முதல எழுத்தெலலாம ஆதி
பகவன் முதறறே யுலகு 1

கறறதனா லாய பயனென்கொல வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின. 2

மலாமிசை ஏகினன் மாணடி சோநதார்
நிலமிசை நீடுவாழ வார 3

வேண்டுதல வேண்டாமை இலானடி சோந
யாண்டும இடுமபை யில [தாக(கு) 4

இருளசே ரிருவினையுஞ சேரா இறைவன்
பொருளசேர புகழபுரிநதா மாடடு 5

பொறிவாயில ஐந்தவிததான பொயதீ ரொழுக்க
நெறிநின்ரூ நீடுவாழ வார 6

தனக்குவமை யிலலாதான தாளசோநதாக்
மனககவலை மாறற லரிது [கலலான் 7

அறவாழி யநதணன் தாளசோநதாக கலலால
பிறவாழி நீநத லரிது. 8

கோளில பொறியிற குணமிலவே எண்குணத்
தானை வணஙகாத தலை. [தான 9

பிறவிப் பெருங்கடல நீநதுவா நீநதா
இறைவனடி சேரா தார. 10

2. வான் சிறப்பு

வானின் றுலகமை வழங்கி வருதலால
தானமிழுத மென்றுணரற பாறறு. 1

துபபாக்குத துப்பாய துப்பாகுத துப்பாக்
துப்பாய தூஉ மழை. [ருத 2

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர வியனுலகத்
துளாநின் றுடறறும பசி. 3

ஏரி னுழாஅர உழவர புயலென்னும
வாரி வளங்குன்றிக கால. 4

கெடுப்பதூஉங் கெடடாகுச் சாவாய்மற
எடுப்பதுஉ மெல்லா மழை [ருங்கே 5

விசுமபின் துளிவீழி னலலான்மற் ருங்கே
பசுமபுல தலிகாண பரிது 6

நெடுங்கடலுங தன்நீமை குன்றுங தடிஙதெழிலி
தான்நலகா தாகி விடின் 7

சிறப்பொடு பூசனை செல்லாது வானம
வறகுமேல வானோகுகு மீண்டு. 8

தானந் தவமிரண்டும தங்கா வியனுலகம
வானம வழங்கா தெனின். 9

நீரின் றமையா துலகெனின் யாயாரூக்கும்
வானின் றமையா தொழுகு 10

3. நீத்தார் பெருமை.

ஒழுக்கதது நீததார பெருமை விழுப்பதது
வேண்டும பனுவல் துணிபு. 1

துறநதார பெருமை துணைக்கூறின் வையத
திறநதாரை எண்ணிக்கொண் டறறு. 2

இருமை வகைதெரிந்(து) இண்டறம பூண்டார
பெருமை பிறநகிற றுலகு 3

உரனென்னுந தோட்டியான் ஓரைநதுங காப்
வரனென்னும வைப்பிறகோர விதது. [பான் 4

ஐநதவிததா னாறறல அகலவிசுமபு ளார்கோமான்
இநதிரனே சாலுங கரி. 5

செயறகரிய செய்வார பெரியா சிறியா
செயறகரிய செயகலா தார 6

சுவையொளி யூறோசை நாறறமென் றைந்தின்
வகைதெரிவான கடடே யுலகு 7

நிறைமொழி மாநதா பெருமை நிலதது
மறைமொழி காடடி விடும 8

குணமென்னுங குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங காதத லரிது. 9

அநதண ரென்போர அறவோரமற் றெவவுயிரக்
செநதண்மை பூண்டொழுக லான. [குஞ 10

4. அறன்வலியுறுத்தல்.

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்க மெவனோ உயிர்க்கு. 1

அறத்தினூஉங்(கு) ஆக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 2

ஒலலும வகையான் அறவினை யோவாதே
செல்லுமவா யெல்லாஞ் செயல 3

மனத்துக்கண் மாசில னாதல அனைத்தறன்
ஆகுல நீர பிற. 4

அழுக்கா றவாவெஃகி இன்னாச்சொல நான்குஞ்
இழுக்கா இயன்ற தறம. 5

அன்றறிவா மென்னா(து) அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கா றப் பொன்றுந் துணை 6

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை 7

வீழ்நாள் படாஅமை நன்றுறறின் அஃதொரு
வாழ்நாள் வழியடைக்குங் கல். [வன் 8

அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம
புறத்த புகழு மில 9

செயற்பால தோரும் அறனே யொருவற்(கு)
உயற்பால தோரும் பழி. 10

5. இல்வாழ்க்கை.

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்
நல்லாற்றின் நின்ற துணை [குமம் 1

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்குமஃ திறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை 2

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
கைம்புலத்தா றோம்பல் தலை. [தானென்றாங் 3

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்று மில் [கை 4

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது 5

அற்றற்றார்ற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறக்
போஒய்ப் பெறுவ தெவன். [தாற்றில் 6

இயல்பிணின் இல்வாழ்க்கை வாழ்பவ னென்
முயல்வாரு ளெல்லாந் தலை. [பான் 7

ஆற்றின் ஒழுக்கி அறனீழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து 8

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று 9

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை
தெய்வத்துள் வைக்கப் படும். [யுந் 10

6. வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்கமாண்புடையளாகிதறகொண்டான்
வளததகாள வாழக்கைதுணை. 1

மனைமாட்சி இலலாளகண் இலலாயின் வாழ்க்
கை எனைமாட்சித தாயினு மில 2

இலலதென் இலலவள மாண்பாலை உளளதென்
இலலவள மாணக கடை. 3

பெண்ணிற பெருஙகக யாவுள கறபெனுங
திண்மையுண் டாகப் பெறின். 4

தெய்வந தொழா அள கொழுநன் தொழு
தெழுவாள பெயயெனப் பெயயு மழை. 5

தற்காததது தற்கொண்டான் பேணித தகைசான்
சொறகாததுச் சோவிலாள் பெண் (ற 6

சிறைகாகருங காப்பெவன் செயயும மகளிர
நிறைகாகருங காப்பே தலை. 7

பெறருன் பெறறபெறுவா பெண்டிர பெருஞ
புததேளிர வாழ மூலகு [சிறப்புப

புகழபுரிந(த) லிலலோரக கிலலை இகழவாரமுன்
ஏறுபோல பீடு நடை. 9

மஙகல மென்ப மனைமாட்சி மறறதன்
நன்கலம நன்மக்கட பேறு, 10

7. மக்கட்பேறு.

பெறுமவற்றுள யாமறிவ திலலை அறிவறிந்த
மகக்டபே றலல பிற 1

எழுபிறப்புங தீயவை தீண்டா பழிபிறங்காப
பண்புடை மகக்ட் பெறின் 2

தமபொரு ளெனபதம மகக்ள அவாபொருள
தந்தம வினையான வரும. 3

அமிழ்தினும ஆற்ற இனிதேதம மகக்ள
சிறுகை அளாவிய கூழ 4

மகக்ளமெய் தீண்ட லுடறகின்பம மற்றவா
சொறகேட்டல இன்பஞ செவிகரு 5

குழலினி(து) யாழினி(து) என்பதம மகக்ள
மழலைசசொல கேளா தவா 6

தந்தை மகற்காற்றும நன்றி அவையத்து
முந்தி யிருப்பச செயல 7

தமமின்தம மக்கள அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க கெலலாம இனிது 8

இன்ற பொழுதில பெரிதுவக்கும தன்மகனைச
சான்றோன எனக்கேட்ட தாய 9

மகன்தந்தைக காற்றும உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொலலெனுஞ சொல 10

8. அன்புடைமை.

அன்பிறகு முணடோ அடைகருதாழு ஆவலா
புன்கணீர பூசல தரும 1

அனபிலா ரெலலாத தமகருரியா அன்புடையார
எனபு மூரியா பிறாகரு. 2

அன்போ டியைநத வழகென்ப ஆருயிரக(கு)
என்போ டியைநத தொடாபு 3

அனபீனும ஆவ முடைமை அதுவீனும
நணபெனனும நாடாச சிறபபு 4

அன்புற நமாநத வழகென்ப வையகத
தின்புறரூர எயதும சிறப்பு 5

அறததிறகே அனபுசார பெனப அறியார
மறததிறகும அஃதே துணை, 6

எனபி லதனை வெயிலபோலக காயுமே
அன்பி லதனை அறம 7

அனபகந திலலா உயிரவாழகைக வன்பாறகண்
வறறல மரநதளிர்த தறறு. 8

புறததுறுப பெலலாம எவன்செயயும யாகைக
அகததுறுப பனபி லவாகரு 9

அன்பின் வழிய(து) உயிரநிலை அஃசிலாரக(கு)
என்புதோல போரதத உடமபு 10

9. விருந்தோம்பல்.

இருநதோமபி இலவாழவ தெலலாம விருந
வேளாணமை செய்தற பொருடடு [தோமபி 1

விருநத்து புறததாத தாணுணடல சாவா
மருநதெனினும வேணடறபாற றனறு 2

வருவிருநது வைகலும ஓமபுவான் வாழகைக
பருவநது பாழபடுத லினறு 3

அகனமாநது செயயா ளுறையும முகனமாநது
நலவிருந தோமபுவான் இல 4

விதது மிடலவேண்டும கொலலோ விருநதோமபி
மிசசின் மிசைவான் புலம 5

செல்விருந தோமபி வருவிருநது பாததிருப
நலவிருநது வானத தவாகரு [பான 6

இலலதுலலத தென்பதொன் றிலலை விருநதின்
துலலததுலல வேளவிப பயன 7

பரிநதோமபிப பறறறறே மென்பா விருந
வேளவி தலைப்படா தா [தோமபி 8

உடைமையு ளின்மை விருநதோமபல ஓமபா
மடமை மடவாரக ணுணடு 9

மோப்பக குழையும அனிசசம முகநதிரிநது
நோகக குழையும விருநது 10

10. இனியவைகூறல்

இன்சொலா லீரம் அளவுஇப் படிறிலவாஞ்
செம்பொருள கண்டார்வாய்ச் சொல். 1

அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்(து)
இன்சொல ஞுகப் பெறின். 2

முகததா னமர்நதினிது நோக்கி யகத்தானும்
இன்சொ லினதே யறம். 3

துன்புறூஉ துவ்வாமை இல்லாகும் யாமாட்
இன்புறூஉ மின்சொ லவாக்கு. [டும் 4

பணிவுடைய னின்சொல ஞுதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 6

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். 7

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும். 8

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 9

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவாந் தற்று. 10

11. செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 1

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2

பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 3

திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
கொளவர் பயன்தெரி வார். 4

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 5

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. 6

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 7

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 8

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 9

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

12. நடுவுநிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின். 1

செப்ப முடையவ ரொக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து. 2

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 3

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். 4

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 5

கெடுவல்யா னென்ப தறிகதக் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 6

கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் ருழ்வு. 7

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்
கோடாமை சான்றோர்க் கணி. [தொருபாற் 8

சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின். 9

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 10

13. அடக்கமுடைமை

அடக்கம் அமரரு ளுய்க்கும் அடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும். 1

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அத்தனினுஉங் கில்லை உயிர்க்கு. 2

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றி னடங்கப் பெறின். 3

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 4

எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 5

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து. 6

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 7

ஒன்றனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்
நன்றாகா தாகி விடும். 8

தீயினுற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினுற் சுட்ட வடு. 9

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து. 10

14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலா லொழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 1

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. 2

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 4

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும 4

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்
ஒழுக்க மிலான்கண் உயர்வு. [றில்லை 5

ஒழுக்கததி லெல்லா ருயர்வோர் இழுக்கத்தின்
ஏதம படுபாக் கறிந்து. 6

ஒழுக்கத்தி னொய்துவா மேன்மை இழுக்கத்தின்
எய்துவ செய்தாப் பழி. 7

நன்றிக்கு வித்தாகும் நலலொழுக்கந் தீயொ
ரன்றும் இடும்பை தரும். [ழுக்கம் 8

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 9

உலகதோ டொட்ட ஒழுகல் பலகறுஞ்
கல்லா றறிவிலா தார். 10

15. பிறனில்விழையாமை

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை
அறம்பொருள் கண்டார்க ணில். [ஞாலத்து 1

அறன்கடை நின்றருரு ளெல்லாம் பிறன்கடை
நின்ருரிற் பேதையா ரில். 2

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். 3

எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணை
தேரான் பிறனில் புகல். [யும் 4

எளிதென இல்லிறப்பா னெய்துமெஞ ஞான்
விளியாது நிறகும் பழி. [றும் 5

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண். 6

அறனியலா னில்வாழுவா னென்பான் பிறனிய
பெண்மை நயவா தவன். [லாள் 7

பிறன்மனை நோகாத பேராண்மை சான்
அறனென்ரு ஆன்ற வொழுக்கு. [ரோர்க்(கு) 8

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறறகுரியா டோள்டோயா தார். 9

அறன்வரையா னல்ல செயினு பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 10

16. பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 1

பொறுத்த லிறப்பினை என்றும் அதனை
மறத்த லதனினும் நன்று. 2

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மை
வன்மை மடவார்ப் பொறை. [யுள் 3

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறை
போற்றி யொழுகப் படும். [யுடைமை 4

ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 5

ஒறுத்தாக் கொருநாளை இன்பம் பொறுத்
தொன்றுந் துணையும் புகழ். [தார்க்கு 6

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)
அறனல்ல செய்யாமை நன்று. 7

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். [யுள் 8

துறந்தாரிற் றூய்மை யுடைய நிறந்தாவாய்
இன்னுச்சொல் நோற்கிற் பவர். 9

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரின் பின். 10

17. அழுக்காறாமை

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்றன் நெஞ்சத்(து)
அழுக்கா றிலாத இயல்பு. 1

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 2

அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்
கேணு கழுக்கறுப் பான். [கம் 3

அழுக்காறறி னல்லவை செய்யா ரிழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 4

அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 5

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும். 6

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவன்
தவ்வையைக் காட்டி விடும். 7

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 8

அவ்விய நெஞ்சத்தா னக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 9

அழுக்கற் றகன்றாரு மில்லைஅஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். 10

18. வெ∴காமை

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். 1

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 2

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 3

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 4

அஃகி யகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 5

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்
பொல்லாத சூழக் கெடும். [வெஃகிப் 6

வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 7

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃ
வேண்டும் பிறன்கைப் பொருள. [காமை 8

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு. 9

இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு. 10

19 புறங்கூறாமை.

அறங்கூ றனல்ல செயினும் ஒருவன்
புறங்கூ றெனன்ற லினிது. 1

அறனழீஇ யலலவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்தது நகை. 2

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழதலிற் சாதல்
அறங்கூறு மாக்கந தரும். 3

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்
முன்னின்று பின்னோக்காச் சொல். [லற்க 4

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்
புன்மையாற் காணப் படும். [சொல்லும் 5

பிறன்பழி கூறுவான் றன்பழி யுளளூங்
கிறன்றெரிந்து கூறப் படுமெ. 6

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட நேற்ரு தவா. 7

துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினர்
என்னெகொல் ஏதிலா மாட்டு. 8

அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. 9

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு 10

20. பயனிலசொல்லாமை

பல்லார் முனையப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும். 1

பயனில பல்லார்முற் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. 2

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. 3

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. 4

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 5

பயனிலசொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 6

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 7

அரும்பய னுயும் அறிவினர் சொலலார்
பெரும்பய னில்லாத சொல். 8

பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மரு
மாசறு காட்சி யவர். [டீர்ந்த 9

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 10

21. தீவினையச்சம்

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. 1

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். 2

அறிவினு ளெல்லாக் தலையென்ப தீய
செறுவாாக்குஞ் செய்யா விடல். 3

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. 4

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 5

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். 6

எனைப்பகை உற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். 7

தீயவை செய்தார் கெடுதற் கிழறன்னை
வீயா தடியுறைக் தற்று. 8

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். 9

அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். 10

22. ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொலலோ உலகு. 1

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற பொருட்டு. 2

புததே ளுலகத்தும் இண்டும் பெறலரிதே
ஒப்புரவி னலல பிற. 3

ஒத்த தறிவா னுயிர்வாழுவான் மற்றையான்
செத்தாருள வைக்கப் படும். 4

ஊருணி நீரநிறைந் தறறே உலகவாம்
பேரறி வாளன் றிரு. 5

பயன்மர முள்ளூர்ப் பழுததற்றாற் செலவம்
நயனுடை யான்கட் படின். 6

மருந்தாகித தப்பா மரததற்றாற் செல்வம்
பெருநதகை யான்கட் படின். 7

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 8

நயனுடையா னல்கூாந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. 9

ஒப்புரவி னால்வருங் கேடெனின் ஆஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. 10

23. இகை

வறியார்க்கொன் றீவதே இகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 1

நல்லா ரெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 2

இலனென்னு மெவ்வ முரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள. 3

இன்னு கிரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணு மளவு. 4

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். 5

அற்ரு ழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ரான் பொருளவைப் புழி. 6

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. 7

ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடை
வைத்திழக்கும் வன்க ணவர். [மை 8

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். 9

சாதலி னின்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை. 10

24. புகழ்

ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு. 1

உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்
ஈவார்மே னிற்கும் புகழ். [கொன்(று) 2

ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு நிற்பதொன் றில். 3

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ரு புத்தே ளுலகு. 4

நத்தம்போற் கேடும் உளதாருஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. 5

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் ரோன்ரு மை நன்று. 6

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். 7

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசை
எச்சம் பெரு அ விடின். [யென்னும் 8

வசையிலா வண்பயன் சூன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 9

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசை
வாழ்வாரே வாழா தவர். [யொழிய 10

25. அருளுடைமை

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்
பூரியார் கண்ணு முள. [செல்வம் 1

நல்லாற்றூ ணடி அருளாள்க பல்லாற்று(ல்)
தேரினு மஃதே துணை. 2

அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை இருள்சேர்ந்த
இன்ன உலகம் புகல். 3

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. 4

அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. 5

பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்
அல்லவை செய்தொழுகு வார். [நீங்கி 6

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு. 7

பொருளற்றூர் பூப்ப தொருகால் அருளற்றூர்
அற்றூர்மற் றூத லரிது. 8

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றூற்
அருளாதான் செய்யும் அறம். [தேரின் 9

வலியார்முந் நன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. 10

26. புலான்மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனமை ஆளும் அருள். 1

பொருளாட்சி போற்றுதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்றின் பவர்க்கு. 2

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா
உடல்சுவை யுண்டார் மனம். [தொன்றன் 3

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். 4

உண்ணுமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணுத்தல் செய்யா தளறு. 5

தினறபொருட்டாற் கொல்லா துலகெனின்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். [யாரும் 6

உண்ணுமை வேண்டும் புலால் பிறிதொன்றன்
புண்ணை துணர்வாரப் பெறின். 7

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணுர்
உயிரிற் றலைப்பிரிநத ஊன். 8

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஓன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று. 9

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எலலா உயிருந் தொழும். 10

27. தவம்

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 1

தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது. 2

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்
மற்றை யவர்கள தவம். 3

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும். 4

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 5

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்ல
அவஞ்செய்வா ராசையுட் பட்டு. 6

சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 7

தன்னுயிர் தானறப் பெற்றதனை யஃதைய
மன்னுயி ரெல்லாந் தொழும். 8

கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 9

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 10

28. கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும். 1.

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்
தானறி குற்றப் படின். [சந் 2

வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. 3

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. 4

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்கம் எற்றெற்
றேதம் பலவுந் தரும். [றென் 5

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில், 6

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. 7

மனத்தது மாசாக மாண்டாநீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் 8

கணிகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். 9

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 10

29. கள்ளாமை

எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. [தொன்றும் 1

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்ளே மெனல். 2

களவிலு லாகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். 3

களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். 4

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். 5

அளவின்க ணின்றுழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர். 6

களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில். 7

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. 8

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ற தவர். 9

கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. 10

30. வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்
தீமை யிலாத சொலல். [றுங் 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 2

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன். 4

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாறிற் றலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
எல்லா அறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்
செய்யாமை செய்யாமை நன்று. [பிற 7

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்
வாய்மையி னல்ல பிற. [தொன்றும் 10

31. வெகுளாமை.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லி
காக்கிலென் காவாக்கா லென். [டத்துக் 1

செல்லர இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற. 2

மறத்தல் வெகுளியை யார்மாட்டுங் தீய
பிறத்த லதனன் வரும். 3

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. 4

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்
தன்னையே கொல்லுஞ் சினம். [கால் 5

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இன
ஏமப் புணையைச் சுடும். [மென்னும் 6

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 7

இணரெரி தோய்வன்ன இன்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

உள்ளிய வெல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 9

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 10

32. இன்னசெய்யாமை.

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்ன
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்ன செய்தவக் கண்ணும் மறுத்தின்ன
செய்யாமை மாசற்றார் கோள. 2

செய்யாமற் செற்றார்க்கு மின்னத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 3

இன்னசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 4

அறிவினை ஞருவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போற் போற்றுக் கடை. 5

இன்ன எனத்தா னுணர்ந்தவை துன்னைமை
வேண்டும் பிறன்கட் செயல. 6

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கும் மனத்
தானசெய் யாமை தலை. [தானும் 7

தன்னுயிர்க் கின்னமை தானறிவா னென்
மன்னுயிர்க் கின்ன செயல். [கொலோ 8

பிறர்க்கின்ன முற்பகற் செய்யிற் றமக்கின்ன
பிற்பகற் ருமே வரும். 9

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்
நோயின்மை வேண்டு பவர். [செய்யார் 10

33. கொல்லாமை.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். 1

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. 2

ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 3

நல்லா ரெனப்படுவ தியாதெனின் யாதொன்
கொல்லாமை சூழும் நெறி. [றும் 4

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. 5

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்
செல்லா துயிருண்ணுங் கூற்று. [ணேமேற் 6

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 7

நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை. 8

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 9

உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 10

34. நிலையாமை.

நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 1

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்
போக்கு மதுவினிற் றற்று. 2

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 3

காளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். 4

நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 5

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 6

ஒருபொழுதும் வாழ்வு தறியார் கருதுப
கோடியு மல்ல பல. 7

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. 8

உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 9

புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுட்
டுச்சி லிருந்த உயிர்க்கு. 10

35. துறவு.

யாகினின் யாதனி னீங்கியான் நோதல்
அதனி னதனின் இலன். 1

வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல. 2

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்
வேண்டிய வெல்லா மொருங்கு. [டும் 3

இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை யுடை
மயலாகும் மற்றும் பெயர்த்து. [மை 4

மற்றுத் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்ப
ஆற்றுர்க் குடம்பு மிகை. [றுக்க 5

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வாணை
சுயர்ந்த உலகம் புகும். [ர்க் 6

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 7

தலைப்பட்டார் தீரத் துறந்தா மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 8

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 9

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 10

36. மெய்யுணர்தல்.

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு. 1

இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 2

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. 3

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவாக்கு. 4

எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொ
மெய்ப்பொருள காண்ப தறிவு. [ருள் 5

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படு
மற்றீண்டு வாரா நெறி. [வர் 6

ஓர்த்துள ளுள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள ளேண்டா பிறப்பு. 7

பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்
செம்பொருள் காண்ப தறிவு. [னுஞ் 8

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்
சார்தரா சார்தரு நோய். [துச் 9

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். 10

37 அவாவறுத்தல்.

அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 1

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும. 2

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டிஃலை
யாண்டு மஃதொப்ப தில். 3

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 4

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையார்
அறாரு அற்ற திலர். 5

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரு மவா. 6

அவாவினை யாற்ற அறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். 7

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 8

இன்ப மிடையரு தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். 9

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 10

38. ஊழ்.

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொ
போகூழாற் றோன்றும் மடி. [ருள் 1

பேதைப் படுக்கு மிழவூழ் அறிவகற்றும்
ஆகலூ ழுற்றக் கடை. 2

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும். 3

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 4

நல்லவை எல்லாம் நனியவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. 5

பரியினு மாகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 6

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது. 7

துறப்பார்மற் றுப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின். 8

நன்றுங்கா னல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லற் படுப தெவன். 9

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 10

திருக்குறள்

பொருட்பால்

இயல்கள்:		அதிகாரம்:
1.	அரசியல்	39—63
2.	அங்கவியல்	64—95
3.	ஒழிபியல்	96–108

39. இறைமாட்சி

படைகுடி கூழமைச்சு நட்பர ்
உடையா னரசரு ளேறு. 1

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 2

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. 3

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. 4

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வருத்தலும் வல்ல தரசு. 5

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறும் மன்ன னிலம். 6

இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொ
ருன்கண் டனைத்திவ் வுலகு. [லாற் 7

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்
இறையென்று வைக்கப் படும். [கட்கு 8

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. [வேந்தன் 9

கொடையளி செங்கோல் குடியோம்ப னன்னும்
உடையானஞ் வேந்தர்க் கொளி. 10

40. கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 2

கண்ணுடைய ரென்பவா கற்றோ முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 3

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 4

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையயே கல்லா தவர். 5

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 6

யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 7

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து. 8

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 9

கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 10

41. கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 1

கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 2

கல்லா தவரும் நனிகல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். 3

கல்லாதா ஞெட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார். 4

கல்லா ஒருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 5

உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். 6

நுண்மா ணுழைபுல மில்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. 7

கல்லார்கட் பட்ட வறுமையி னின்னதே
கல்லார்கட் பட்ட திரு. 8

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்
கற்ற ரனைத்திலர் பாடு. [துங் 9

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 10

42. கேள்வி.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்
செல்வத்து ளெல்லாந் தலை. [செல்வஞ் 1

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 2

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்ருரோ டொப்பர் நிலத்து. 3

கற்றில ரெயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை. 4

இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். 5

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 6

பிழைத்துணர்ந்தும் பேதைமைசொல்லா ரிழைத்
தீண்டிய கேள்வி யவர். [துணர்ந் 7

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றேட்கப் படாத செவி. 8

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 9

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென். 10

43. அறிவுடைமை.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். 1

சென்ற் இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. 2

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [பொருள் 3

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்
நுண்பொருள் காண்பதறிவு. [பிறர்வாய் 4

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு. 5

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு. 6

அறிவுடையா ராவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 7

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். 8

எதிரதாக் காக்கும் அறிவினர்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 9

அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர். 10

44. குற்றங்கடிதல்.

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 1

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையு மேத மிறைக்கு. 2

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணை
கொள்வர் பழிநாணு வார். [யாக் 3

குற்றமே காக்க பொருளாக் குற்றமே
அற்றந் தருஉம் பகை. 4

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்
வைத்தூறு போலக் கெடும். [னர் 5

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு. 6

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 7

பற்றுள்ள மென்னு மிவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 8

வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 9

காதல காத லறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 10

45. பெரியாரைத் துணைக்கோடல்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 1

உற்றநோய் நீக்கி உருவமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 2

அறியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 3

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 4

சூழ்வாகண் ணுக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 5

தக்கா ரினத்தனைய தாகுமாக வல்லாரைச்
செற்றார் செயக்கிடந்த தில். 6

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். 7

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 8

மூதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. 9

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 10

46. சிற்றினஞ்சேராமை.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 1

நிலத்தியல்பால் நீாதிரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 2

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னா னெப்படுஞ சொல். 3

மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகு மறிவு 4

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனநதூய்மை தூவா வரும் 5

மனநதூயார்க் கெச்சநன் றாகும இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 6

மனநலம் மன்னுயிாக் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். 7

மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. 8

மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து. 9

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற படுப்பதூஉ மில். 10

47. தெரிந்து செயல்வகை.

அழிவதூஉம் ஆவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல். 1

தெரிந்த ினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்
அரும்பொருள் யாதொன்று மில். [வார்க்கு 2

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார். 3

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர். 4

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. 5

செய்தக்க அலல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 6

எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு. 7

ஆற்றின் வருநதா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 8

நன்ருற்ற லுள்ளுந் தவருண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை. 9

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. 10

48. வலியறிதல்.

விஞைவலியுங் தன்வலியும் மாற்ருன் வலியுங்
துஞைவலியுங் தூக்கிச் செயல். 1

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 2

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
இடைக்கண் முறிந்தார் பலர். 3

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்ஞை
வியகதான் விரைந்து கெடும. 4

மீலிபெய் சாகாடும் அச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 5

நுனிக்கொம்ப ரேறிஞ ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிருதி யாகி விடும். 6

ஆற்றி னளவறிந் தீக அதுபொருள
போற்றி வழங்கு நெறி. 7

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 8

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்ருக் கெடும். 9

உளவனை தூக்காத ஒப்புர வாண்மை
வளவனை வல்லிக் கெடும் 10

49. காலமறிதல

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. [லும் 1

பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. 2

அருவினை யென்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 3

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். 4

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். 5

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. 6

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்
துள்வோர்ப்ப வொள்ளி யவர். [பார்த் 7

செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை
காணிற் கிழக்காந் தலை. 8

எய்தற் கரிய தியைந்தக்கா லங்கிலையே
செய்தற் கரிய செயல். 9

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 10

50. இடனறிதல்

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. 1

முரண்சோர்ந்த மொய்ம்பி னவர்க்கு முரண்
ஆக்கம் பலவுந தரும். [சேர்ந்தாம் 2

ஆற்றுரு மாற்றி யடுப இடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். 3

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியா துன்னிச் செயின். 4

நெடும்புனலுள் வெலலும் முதலை அடும்புனலின்
நீங்கி னதனைப் பிற. 5

கடலோடா காலவ னெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து. 6

அஞ்சாமை யலலாற் றுணைவேண்டா ளஞ்
ஞெண்ணி இடத்தாற் செயின். [சாமை 7

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடை
ஊக்க மழிந்து விடும். [யான் 8

சிறைநலனுஞ் சீரு மிலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்ட லரிது. 9

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு. 10

51. தெரிந்துதெளிதல்

அறம்பொரு ளின்ப முயிரச்சம நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

அரியகற் றூசற்றூர் கண்ணுற தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு. 3

குணநாடிக் குறைமு நாடி அவற்றுள
மிகைநாடி மிக்க கொளல். 4

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். 5

அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர
பற்றிலா நாணூ பழி. 6

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந தரும. 7

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும. 8

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 9

தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா இடும்பை தரும். 10

52. தெரிந்துவினையாடல்

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளப் படும். 1

வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை. 2

அன்பறிவு தேற்ற மவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 3

வினைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகை
வேருகும் மாந்தர் பலர். [யான் 4

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. 5

செய்வானே நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல். 6

இதனை இதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை யவன்கண் விடல். 7

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். 8

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ருக
நினைப்பானை நீங்கு நிரு. 9

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. 10

53. சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 1

விருப்பருச் சுற்ற மியையின் அருப்பரு
ஆக்கம் பலவுந் தரும். 2

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. 3

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 4

கொடுத்தலு மின்சொலு மாற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். 5

பெருங்கொடையான் பேணுன் வெகுளியவனின்
மருங்குடையார் மாநிலத் தில். 6

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. 7

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்
அதுநோக்கி வாழ்வார் பலர். [கின் 8

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும். 9

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். 10

54. பொச்சாவாமை

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற சோர்வு. 1

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு 2

பொச்சாப்பார்க் கில்லை புகழுமை யதுவுலகத்
தெப்பாலா லோர்க்கு மணிவு. 3

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 4

மூன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னா றிரங்கி விடும். 5

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். 6

அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். 7

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்
இகழ்ந்தார்க் கெழுமையு மில். [யாது 8

இகழச்சியிற் கெட்டாரை யுளளுக தாக்கம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 9

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின். 10

55. செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியாமாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. 1

வானோக்கி வாழு முலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. 2

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். 3

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு. 4

இயல்புளிக் கோலோச்சும் மன்னவ னட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. 5

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். 6

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 7

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தாற் றானே கெடும். 8

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். 9

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்
கூளகட் டதனெடு நேர். [பைங்கூழ் 10

56. கொடுங்கோன்மை

கொலைமேறகொண் டாரிற் கொடிதே அலைமேற்
டல்லவை செய்தொழுகும் வேந்து. [கொண் 1

வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு. 2

மாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். 3

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. 4

அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 5

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃ
மன்னுவா மன்னர்க் கொளி. [தின்றேன் 6

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழு முயிர்க்கு. 7

இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 8

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
ஒலலாது வானம் பெயல். 9

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்
காவலன் காவா னெனின். [பா 10

57. வெருவந்தசெய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து. 1

கடிதோசீசி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 2

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞயின்
ஒருவந்த மொல்லைக் கெடும். 3

இறைகடிய னென்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். [4

அருஞ்செவ்வி இன்ன முகத்தான் பெருஞ்செல்வம்
பேணற்கண் டன்ன துடைத்து. [5
